1973 பிப்ரவரி 5]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முதல் கட்டமாக தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கான இல்லங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அடுத்த மாதத்தோடு இந்த இல்லங்களின் எண்ணிக்கை 6 ஆக ஆகிறது. மீதமுள்ள 4 இடங்களிலும் இன்னும் இரண்டொரு மாதங்களிலே இந்த இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு விடும். முதலில் 5 ஆயிரம் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் தமிழ் நாட்டில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இந்த 10 இல்லங்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்ட பிறகு, இந்த 5 ஆயிரம் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களை இந்த 10 இல்லங்களில் குடியமர்த்தி அவர்களுக்கு மறு வாழ்வளிப்பதென்று அரசு முடிவு செய்திருக்கிறது. அவர்களாக வந்து இந்த இல்லங்களிலே அவர்கள் தங்களுடைய மறு வாழ்வை உண்டாக்கிக்கொள்வதற்கு முன் வந்தால் சரி அல்லது இந்த 10 இல்லங்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்ட பிறகு அவர்களை சட்டப்படி இங்கே அழைத்து வந்து இங்கே அவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதென்று அரசு உத்தேசித்திருக்கிறது. அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகளெல்லாம் கவனிக்கப்பட ஏதுவாக இருக்கும்.

House-sites to the Harijans

* 9 Q.—THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether any application has been received requesting the Government to acquire lands for the allotment of house-sites to the Harijans living in Kanchi Kovil, Kolathamvalasu, Chinnaiampalayam villages in Erode taluk; and

(*b*) if so, the details of the action taken thereon?

அரிசன மக்களுக்குக் குடியிருப்பு மனைகள்

திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஈரோடு தாலுகா காஞ்சிக்கோவில் கிராமம், கொளத்தாம்வலசு, சின்னயம்பாளையம் ஆகிய பகுதிகளில் வாழும் அரிசன மக்களுக்குக் குடியிருப்பு மனைகள் ஆர்ஜிதம் செய்யக் கோரி மனு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஈரோடு தாலுகா காஞ்சிக் கோவில் கிராமம் கொளத்தான்வலசு பகுதியைப் பொறுத்தமட்டில் பிரிவு 4(1) முன்மொழிவும் பிரிவு 6 விளம்பலும் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. முதல்நிலை மதிப்பீட்டைப் பெற்றவுடன் அவார்டு செய்து, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அரிசனங்களுக்குப் பட்டா வழங்குவார்.

(இ) ஈரோடு தாலுகா காஞ்சிக்கோவில் கிராமம் சின்னயம்பாளையம் பகுதியைப் பொறுத்தமட்டில் பிரிவு 4 (1) முன்மொழிவும் பிரிவு 6 விளம்பலும் வருவாய்த்துறையினரால் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. முதல்நிலை மதிப்பீடு, அவார்டு, பட்டா வழங்கல் எனபன கோவை மாவட்ட ஆட்சியரால் கவனிக்கப்படும்.

Construction of Houses for the Harijans.

*10 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal with the Government to construct houses for the Harijans living in Tirupangur, Thanjavur district where Nandanar was born ?

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தஞ்சை மாவட்டம், நந்தனார் பிறந்த திருப்பன்கூரில் வாழும் அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசு திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம். நடப்பு ஆண்டில் இவ்வூரில் அரிசனங்களுக்காக 20 வீடுகள் கட்டித்தர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

Employment Exchanges

*11 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether efforts are being taken by the Employment Exchanges to find appointment at Star Hotels for candidates coming out of the Catering Institute; and

(*b*) if so, the steps taken during 1971-72?